முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 327 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 2404 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க. விஜயகார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பால்வளத்துறை, மீன்வளத்துறை சார்பில்

ரூ.73.93 கோடி செலவில் 11 முடிவுற்ற திட்டப் பணிகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து - ரூ.15 கோடியில் தூண்டில் வளைவுடன் கூடிய மீன் இறங்கு தளத்திற்கு அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஜன. 30-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 58 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளங்கள், மீன் விதைப் பண்ணைகள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் என 10 முடிவுற்ற திட்டப் பணிகள், பால்வளத்துறை சார்பில் விருதுநகர் மாவட்டம், சூலக்கரை கிரா மத்தில் 15 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள நாளொன்றுக்கு 50 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடை தீவன தொழிற்சாலை ஆகிய வற்றை திறந்து வைத்தும், திருநெல்வேலி மாவட்டம், கூடுதாழை கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவுடன் கூடிய மீன் இறங்குதளம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

மீன்வளத்தை பாதுகாத்தல், நிலைக் கத்தக்க மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமு றைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய் தல், மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறை யில் கையாளப்படுவதை உறுதி செய்வதற் கும் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங் குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீன்பிடி தடை காலங்களில் மீனவர்களுக்கு நிதியுதவி, மீன்பிடி படகுகளுக்கு வரி விலக்களிக்கப் பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல், பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மண் ணெண்ணெய் மானிய விலையில் வழங் குதல், புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற் றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மீனவ மக்களின் வாழ்வாதா ரத்தினை உயர்த்திடவும், சமூக பாதுகாப் பினை உறுதி செய்திடவும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள், மீன் விதைப் பண்ணை கள் மற்றும் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்

தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரத் தில் 21 கோடி ரூபாய் செலவிலும், சிப்பிக்குளத் தில் 7 கோடி ரூபாய் செலவிலும் மேம்படுத் தப்பட்ட மீன் இறங்குதளங்கள், தூத்துக்குடி யில் 5 கோடி ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம், திருச்சிராப்பள்ளியில் 4 கோடி ரூபாய் செல வில் புதியதாக கட்டப்பட்டுள்ள பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலு வலகக் கட்டடம், விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டையில் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் மீன் குஞ்சு வளர்ப்பு குளங்கள், திருப்பத்தூர் மாவட்டம், இலவம்பட்டியில் 5 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள மீன் குஞ்சு பொரிப்பகம், கிருஷ்ணகிரி மாவட் டம், பாரூரில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மரபணு மேம்படுத்தப் பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகம்;

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு பழைய மீன் பண்ணையில் 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சினைமீன் குளங்கள், தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுபிக்கப்பட்ட மீன்விதை பண்ணை, கன்னியாகுமரி மாவட்டம், சிற் றார் அணை|| மீன்வளர்ப்போர் மேம்பாட்டு நிறுவனத்தின் மீன் பண்ணையை 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் என 58 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலான 10 முடி வுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அருப்புக்கோட்டை வட்டம், சூலக்கரை கிராமத்தில் கால்நடை தீவன தொழிற்சா லையை திறந்து வைத்தல்

பால்வளத் துறை சார்பில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் 50 சத வீத நிதி உதவி மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றி யத்தின் 50 சதவீத சொந்த நிதியின் மூலம் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், சூலக்கரை கிரா மத்தில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் 15 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நாளொன் றுக்கு 50 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடை தீவன தொழிற்சா லையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர் கள் திறந்து வைத்தார்.

பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் தீவனத் தேவையை பூர்த்தி செய்யவும், பால் உற்பத்தியை அதிகரித்தி டவும் இப்புதிய கால்நடை தீவன தொழிற் சாலை வழிவகுக்கும்.

தூண்டில் வளைவுடன் கூடிய மீன் இறங் குதளம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்தில் உள்ள கூடுதாழை கிராமத்தில் உள்ள மக்களின் முக்கிய வாழ்வாதாரம் மீன்பிடித்தல் மற்றும் அது சார்ந்த தொழில் ஆகும். இக்கிராமத்தில் சுமார் 247 மீனவர் கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின் றனர்.

எனவே, அப்பகுதி மீனவர்களின் நலனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு நபார்டு தேசிய வேளாண்மை மற் றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கியின் நிதி யுதவிடன், கூடுதாழை கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளை வுடன் கூடிய மீன் இறங்குதளம் அமைப்ப தற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இப்புதிய தூண்டில் வளைவு அமைப்ப தின் மூலம், மீனவர்கள் படகுகளை இயக் குவது மிகவும் சுலபமாகும். மீனவர்களின் சமூகபொருளாதார நிலை உயரும். அதிகப் படியான படகுகளை பாதுகாப்பாக நிறுத்த வும் வழிவகை ஏற்படுவதோடு, பிடிக்கப் படும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளவும் இயலும்.

இந்நிகழ்ச்சியில், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். இராதா கிருஷ்ணன், பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண் ணப்பன், தலைமைச் செயலாளர் நா. முரு கானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வ ளம், மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, முதன்மைச் செயலாளர்/ மீன்வளம் மற் றும் மீனவர் நலத்துறை ஆணையர் சுன் சோங்கம் ஜடக் சிரு, பால்பண்ணை மேம் பாட்டு துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணை யத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. சு. வினீத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 58 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளங்கள், மீன் விதைப் பண்ணைகள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் என 10 முடிவுற்ற திட்டப் பணிகள், பால்வளத்துறை சார்பில் விருதுநகர் மாவட்டம், சூலக்கரை கிராமத்தில் 15 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள நாளொன்றுக்கு 50 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடை தீவன தொழிற்சாலை ஆகியவற்றை திறந்து வைத்தும், திருநெல்வேலி மாவட்டம், கூடுதாழை கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவுடன் கூடிய மீன் இறங்குதளம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, முதன்மைச் செயலாளர்/ மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் சுன்சோங்கம் ஜடக் சிரு, பால்பண்ணை மேம்பாட்டு துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. சு. வினீத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம்

ரூ.327.69 கோடியில் கட்டப்படவுள்ள 2404 புதிய குடியிருப்புகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஜன.30 -

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம் பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ. 327.69 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 2404 புதிய குடியிருப்புகளுக்கு - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2025) தலை மைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ் விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 327 கோடியே 69 இலட்சம் ரூபாய் செல வில் கட்டப்படவுள்ள 2404 புதிய அடுக் குமாடி குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வச திகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதி யினை ஏற்படுத்தி தரும் வகையில் முத் தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்த வீட்டுவசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானதாக இருக்காது. அவர்களுக்கு குடிநீர், சுகா தாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்ப டுத்துவது அவசியம் என்று கருதி தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெய ரினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற் றம் செய்து ஆணையிட்டார்.

குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத் தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசால் பல் வேறு திட்டங்கள் சீரிய முறையில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றப் பின்னர், இதுநாள் வரை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 128 திட் டப் பகுதிகளில் 4,752.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 42,313 அடுக்கு மாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக் கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத் தின் கீழ் திருநெல்வேலி மாவட்டம், இரா தாபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கலைஞர் நகர் திட்டப்பகுதியில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 59 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் 468 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்; பெரியார் நகர் திட்டப்பகுதியில் தரை மற் றும் ஐந்து தளங்களுடன் 63 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் 504 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்தி ரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒட்டன் சத்திரம் - ஆச்சார்யா வினோபா பாவே நகர் திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 66 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் 480 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்; அண்ணா நகர் திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 57 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 432 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

ஆசிய வளர்ச்சி வங்கி திட்டத்தின் கீழ், நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிபா ளையம், ஆயக்காட்டூர் திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 81 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் 520 புதிய அடுக்குமாடி குடி யிருப்புகள்;

என மொத்தம் 327 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத் தின் சார்பில் புதிதாக கட்டப்படவுள்ள 2404 குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங் களும், தார்ச் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செய லாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர்டாக்டர்க. விஜயகார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வருவாய்த் துறை சார்பில் 16.6 கோடியில் 2 வட்டாட்சியர் கட்டடங்கள் –

25 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜன. 30-

வருவாய்த் துறை சார்பில் 16.06 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வட்டாட்சி யர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 25 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகளை தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார் பில் மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடு துறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் 8 கோடியே 58 இலட் சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள 2 வட்டாட்சியர் அலுவலகக் கட்ட டங்கள் மற்றும் 7 கோடியே 47 இலட்சத்து 21 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 25 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

துறையின் பணிகளை மேலும் செம் மைப்படுத்தும் வருவாய்த்துறை, மாநிலத் தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதி லும், அரசின் பல்வேறு சமூகப் பொருளா தாரத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணி களை மேலும் செம்மைப்படுத்தும் வகை யில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் 4 கோடியே 57 இலட்சத்து 42 ஆயிரம் செலவிலும், நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத் தில் 4 கோடியே 97 ஆயிரம் செலவிலும், கட்டப்பட்டுள்ள 2 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் அலங்காநல்லூர் மற்றும் திருமங்கலம் வட்டம் திருமங்கலம், நாகப்பட்டினம் மாவட் டம், கீழ்வேளூர் வட்டம் வேளாங்கண்ணி, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம் கோடாங்கிபட்டி, கடலூர் மாவட்டம், காட்டு மன்னார்குடி வட்டம் புத்தூர், கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம் சூளகிரி, ஊத்தங் கரை வட்டம் கல்லாவி, கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம் செங்குறிச்சி, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம் வல்லநாடு, கறம்பக்குடி வட்டம் மலையூர், மயிலாடுதுறை மாவட் டம், சீர்காழி வட்டம் திருவெண்காடு, திருப் பூர் மாவட்டம், பல்லடம் வட்டம் கரடிவாவி, கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம் வரப்பட்டி, சென்னை மாவட்டம் - மதுரவா யல் வட்டம் மதுரவாயல், தூத்துக்குடி மாவட் டம், சாத்தான்குளம் வட்டம் பள்ளக்குறிச்சி, ஓட்டப்பிடாரம் வட்டம் மணியாச்சி, திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம் முக்கூடல், மானூர் வட்டம் தாழை யூத்து, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும் புதூர் வட்டம் சுங்குவார்சத்திரம், இராம நாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம் திருப்புலானி, திருவாடானை வட்டம் திருவா டானை, சிவகங்கை மாவட்டம், சிங்கம் புணரி வட்டம் சிங்கம்புணரி, தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் துவரங் குறிச்சி, கும்பகோணம் வட்டம் தேவனாம் சேரி மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் வட்டம் திருப்போரூர் ஆகிய இடங்களில் 7 கோடியே 47 இலட்சத்து 21 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 25 வரு வாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்;

என மொத்தம் 16 கோடியே 5 இலட் சத்து 60 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 25 வருவாய் ஆய்வாளர் அலுவல கத்துடன் கூடிய குடியிருப்புகள் ஆகிய வற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், திரு மதி.பெ.அமுதா, இயக்குநர் (சமூக பாதுகாப் புத் திட்டம்) க.வீ.முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், நிவேதா எம்.முருகன், எஸ்.ராஜ்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, மயிலாடுதுறை நகராட்சி தலைவர் என். செல்வராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிர திநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையக் கூட்டம்!

அருட்தந்தை சொ.ஜோ.அருண் தலைமையில் நடைபெற்றது!

காஞ்சிபுரம், ஜன. 30 -

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நேற்று (29.01.2025) தமிழ் நாடு மாநில சிறுபான்மை யினர் ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ.அருண் அவர் கள் தலைமையில், சிறு பான்மையினருக்கென தமிழ்நாடு அரசு செயல்ப டுத்தும் பல்வேறு நலத்திட் டங்கள் குறித்த கலந் தாய்வு கூட்டம் நடை பெற்றது.

இவ்ஆய்வுக்கூட்டத்தில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட் டோர் மற்றும் சிறு பான் மையினர் நலத்துறை சார் பில் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்து ஆய்வு மேற் கொண்டு, ஆலோசனை களை வழங்கினார். மேலும் சிறுபான்மை மதத்தலை வர்கள் மற்றும் பொதுமக்க ளிடம் கோரிக்கைகள் கேட்டறிந்து, மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

ஆய்வுக் கூட்டத்தினை தொடர்ந்து, மாவட்ட பிற் படுத்தப்பட்டோர், மிக வும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில், கிறித் துவ நல வாரிய உறுப்பி னர் அட்டைகள் 13 நபர்க ளுக்கும், முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மூலம் 24 பயனாளிகளுக்கு ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டி லான காசோலையும் தமிழ்நாடு மாநில சிறு பான்மையினர் ஆணை யத்தின் தலைவர் அவர்கள் வழங்கினார்கள். தொடர்ந்து செய்தியாளர் கள் சந்திப்பு நடைபெற்றது.

இவ்ஆலோசனை கூட் டத்தில் மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பி னர் செயலாளர் வா.சம் பத், மாவட்ட ஆட்சித்த லைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத்த லைவர் எம்.எம்.அப்துல் குத்தூஸ், மாநில சிறுபான் மையினர் ஆணையத்தின் உறுப்பினர்கள் ஹேமில் டன் வில்சன், நாகூர் எ. எச்.நஜ்முதீன், பிரவீன் குமார் டாடியா, ராஜேந் திர பிரசாத், எம்.ரமீட்க பூர், ஜெ.முகமது ரபி, எஸ். வசந்த், காஞ்சிபுரம் மாநக ராட்சி மேயர் திருமதி. எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர் கி.சண்முகம், மாவட்ட வருவாய் அலுவ லர் செ. வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. க.ஆர்த்தி, சார் ஆட்சியர் ஆஷிக் அலி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திருமதி. ந.மிருணாளினி, காஞ்சிபுரம் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. மலர்க்கொடி குமார், உள் ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சிறுபான்மை மதத்தலை வர்கள், அரசு அலுவலர் கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் ஒரே நேரத்தில் 500 கிராமிய, பரத நாட்டிய கலைஞர்கள் பங்கேற்ற நாட்டிய சங்கம விழா செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் கடற்கரை கோவில் வளாகத்தில் திறந்தவெளி மேடையில் நடைபெற்றது. செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார். இதற்கு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை தாங்கினார். தமிழ்நாடு இயல், இசை நாடக மன்ற உறுப்பினர் – செயலர் விஜயாதாயன்பன் வரவேற்றார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன், தமிழ்நாடு இயல், இசை நாடக மன்ற பொதுக்குழு உறுப்பினர் ஸ்ரீநிதி சிதம்பரம், மாமல்லபுரம் சுற்றுலா அலுவலர் எஸ்.சக்திவேல், மாமல்லபுரம் பேரூராட்சி கவுன்சிலர் மோகன்குமார் விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.